தொல்காப்பிய மன்றம் - கனடா
Association for Tolkappiyam - Canada
கனடா
தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

பிரிவு - 8 (2011 இல் பிறந்தோர்)

# தொல்காப்பியத்தில் பொருளதிகாரம்

நாம் தமிழர். உலகில் இன்று **வாழும் மொழிகளில்** தமிழ்மொழி, **முதன்மைச் செம்மொழியாகும்**. தமிழின் உயர்விற்கு காரணம் அதன் தொன்மையும் செழுமையும் கொண்ட தொல்காப்பியம் எனும் இலக்கண நூலாகும். தொல்காப்பியம், பொது ஆண்டிற்கு முன் 711 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டது.

இந் நூல், **மொழி, அறிவியல், பண்பாடு** முதலிய துறைகளில் **வளர்ச்சி பெற்ற ஒரு சமூகத்திலிருந்து பிறந்தது**. தொல்காப்பியம் ஒரு தொகை நூலாகும். இந் நூல் தொகுக்கப்படுவதற்கு முன்பே, தமிழில், பல அரிய இலக்கணக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருந்தன. அக் கோட்பாடுகளின் அடிப்படையில் இலக்கியங்களும் படைக்கப்பட்டிருந்தன. **அவற்றின் தொடர்பாகவே தொல்காப்பியத்தை நாம் காண்கிறோம்.**

இதனை உறுதி செய்யும் விதமாகவே தொல்காப்பியத்தில் “என்ப”, “என்மனார்”, போன்ற சொற்களை 200 க்கும் மேற்பட்ட இடங்களில் தொல்காப்பியர் கையாண்டிருக்கிறார். இதன் மூலம் தொல்காப்பியர், தனக்கு முன், தமிழுக்கு இலக்கணம் வகுத்திருந்த ஆசிரியப் பெருமக்களது பங்கினையும் நன்றியறிதலுடன் நினைவு கூருகிறார். எனவே, **தமிழின் பழமை தொல்காப்பியத்திற்கும் முந்தியது** என்பது தெளிவு.

தொல்காப்பியப் பொருளதிகாரம், **அக் காலத் தமிழ்மொழியின் உயர் நிலையையும், தமிழரின் அறிவியல் ஆழத்தையும் , பண்பாட்டு விழுமியங்களையும் மரபுகளையும் எடுத்துக் கூறும் ஓர் அதிகாரமாகும். பொருளதிகாரத்தின் இத் தனித்தன்மை காரணமாக தொல்காப்பியம் ஓர் இலக்கியமாகவும் கொள்ளப்படுகிறது.**

உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லாத வகையில் **வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த பெருமை** தொல்காப்பியரையே சாரும்.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும், தனித்தனி ஒன்பது இயல்களைக் கொண்டது.

தொல்காப்பியம், பொருளதிகாரத்தில், **கவிதைக்குரிய பாடுபொருள், வடிவம், அணி, மரபு** முதலியவற்றிற்கான இலக்கண விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. பொருளதிகாரத்தின் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய நான்கு இயல்களும் அகம் சார்ந்த பாடுபொருள்கள் பற்றியவை. **மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுள் இயல்** ஆகிய இயல்கள், பாடலுக்கு இன்றியமையாத **வடிவம், அணி, மெய்ப்பாடுகள்** பற்றிப் பேசுபவை. தொல்காப்பியரின் **அகத்திணை, புறத்திணைக் கோட்பாடுகள் தனித்துவமானவை**. மனிதனின் **உள்ளார்ந்த காதல் வாழ்க்கையை அகம்** என்றும், **அகம் அல்லாதன எல்லாம் புறம்** என்றும் வகுத்தார். தொல்காப்பியர், நிலத்தின் தன்மைக்கு ஏற்ப, அவற்றை **குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்** என ஐவகையாகப் பிரித்தார். ஐவகை நிலங்களுக்கும் உரிய ஒழுக்கங்களாக, முறையே, **புணர்தல், இருத்தல், பிரிதல், ஊடல், இரங்கல்** என்பவற்றை இணைத்து, அகத்திணை மரபை வடிவமைத்தார்.

அகத்திணைப் பாடல்களின் பாத்திரங்கள், அவரவர் பெயரால் சுட்டப்படல் ஆகாது என்பது தொல்காப்பியர் வகுத்த விதியாகும். இதனை, தொல்காப்பியர்,

> “மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
> சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்.” - என்றார்.

அகத்திணையில் அடங்காத போர் முதலாய அனைத்து ஒழுக்கங்களையும் **புறத்திணையுள்** அடக்கினார்.

பொருளதிகாரத்தில், அகம் புறம் எனப் பாடுபொருளை வகுத்த தொல்காப்பியர் அவை அமைய வேண்டிய **வடிவத்தினை, செய்யுள் இயலில்** அமைத்தார். பாத்திரங்களின் உணர்ச்சி வேறுபாடுகளை **மெய்ப்பாட்டு இயலில்** வகுத்துள்ளார். பாடல்களை அழகு செய்யும் **அணிகளை உவமை இயலில்** விளக்கியுள்ளார். பண்டைக் காலத்தில் தமிழர், **மருத்துவம், வானியல் முதலாய அறிவியல்** சார்ந்த துறைகளில் வல்லுனராக இருந்திருக்கிறார்கள் என்பதைப் பொருளதிகார **மரபியல்** விளக்குகிறது.

தொல்காப்பியம், பொருளதிகாரம், இக்கால வரலாற்று மாணவருக்கு இற்றைக்கு 2700 ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழகம், தமிழ் மக்கள் பற்றிய தகவல்களைத் தரும் அரியதொரு வரலாற்று ஆவணமாகும்.

இத்தகைய தொல்காப்பியத்தின் தொன்மையையும் பெருமையையும் நாமும் கற்போம், உலகறியச் செய்வோம்.

நன்றி, வணக்கம்.